செ.வெ.எண்.16 நாள்.09.01.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் திருநெல்வேலியில் புத்தகத் திருவிழா 2018 பிப்ரவரி 3 முதல் 11 வரை நடத்துவது தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமயில் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் திருநெல்வேலியில் புத்தகத் திருவிழா 2018 பிப்ரவரி 3 முதல் 11 வரை நடத்துவது தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமயில் இன்று (09.01.2018) நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது :-

திருநெல்வேலி, பாளையங்கோட்டை வ.உ.சி. விளையாட்டு மைதானத்தில் புத்தக திருவிழா 2018 பிப்ரவரி 03 முதல் 11ம் தேதி வரை ஒன்பது நாட்கள் (National Book Trust, India) சென்னை புத்தக மேம்பாட்டு மையம் மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து நடத்தப்படவுள்ளது. புத்தகத் திருவிழாவிற்கு வருகை தரும் பொதுமக்களுக்கு தேவையான கழிப்பிட வசதி போக்குவரத்து வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்திட வேண்டும். புத்தகத் திருவிழாவிற்கு அதிக அளவிலான மக்கள் வருகை தரும் வகையில் விளம்பரப்படுத்த வேண்டும். மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் புத்தக திருவிழா குறித்த விளம்பர பேனர்களை வைத்திட வேண்டும். பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு போட்டிகளை நடத்தி, புத்தகங்களை பரிசாக வழங்க வேண்டும். உள்ளூர் தொலைக்காட்சிகளில் புத்தக திருவிழா தொடர்பாக பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் விளம்பரப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். புத்தக திருவிழாவில், நூற்றுக்கும் மேற்பட்ட புத்தக அரங்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். புத்தக திருவிழாவிற்கு வரும் பொதுமக்கள் உணவு, சிற்றுண்டி அருந்தும் வகையில் உணவு அரங்குகளையும் அமைக்க வேண்டும். பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களைக் கொண்டு தினசரி கலைநிகழ்ச்சிகள் நடத்திட ஏற்பாடு செய்திட வேண்டும். கலைபண்பாட்டுத் துறையின் மூலம் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். புத்தகம் வாங்கும் ஆர்வத்தை அதிகரிக்கும் வகையிலும், இளைஞர்கள் புத்தகம் வாசிக்கும் ஆர்வத்தை அதிகரிக்கும் வகையிலும் சிறப்பாக நடத்திட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களும், ஒருங்கிணைப்பாளர்களும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பேசினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., உதவி ஆட்சியர் திரு.க.இளம்பகவத்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, கோட்டாட்சித்தலைவர்கள் (திருநெல்வேலி) திருமதி.மைதிலி, (தென்காசி) திரு.ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) திரு.பழனிக்குமார், மாவட்ட நூலக அலுவலர் திரு.முனியப்பன், மாவட்ட மைய நூலகர் திரு.முத்துகிருஷ்ணன், பொதிகை தமிழ்ச்சங்கத் தலைவர் கவிஞர்.ராஜேந்திரன், எழுத்தாளர் திரு.நாறும்புநாதன், பேராசிரியர்கள் திரு.ராமச்சந்திரன், திரு. மதிவாணன் உள்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.